**சுருக்கம்**

பதிவுத்துறை – சந்தை வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டு சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக்குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு(ஜே1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.180 நாள் : 27.12.2021

பிலவ, மார்கழி– 12

திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண். 75, வணிகவரி மற்றும் பதிவுத்(ஜே1) துறை, நாள் 01.06.2010.
2) அரசாணை (நிலை) எண். 76, வணிகவரி மற்றும் பதிவுத்(ஜே1) துறை, நாள் 01.06.2010.
3) பதிவுத்துறை தலைவர் கடிதம் எண்.29529/எல்1/2021 நாள் 28.8.2021 மற்றும் 23.9.2021.

*******

**ஆணை:**

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 2021–2022 நிதிநிலை அறிக்கையில் பதிவுத்துறையில் பின்பற்றப்படும் சொத்துக்களுக்கான சந்தை வழிகாட்டி மதிப்பினை சீரமைத்தல் தொடர்பாக பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

*'சந்தை வழிகாட்டி மதிப்பு தொடர்பாக கள நிலவரம் பற்றி ஆராய்ந்து, வழிகாட்டி மதிப்பினை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்க, ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்படும்'*

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பதிவுத்துறை தலைவர் அவர்கள் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பதிவுத்துறையில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் சந்தை வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டும், சந்தை வழிகாட்டி மதிப்பினை சீரமைக்க வேண்டியும், கள நிலவரம் பற்றி ஆராய்ந்து வழிகாட்டி மதிப்பினை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைப்பதற்காகவும் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழு ஒன்றினை அமைப்பதற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. பதிவுத்துறை தலைவரின் கருத்துருவினை நன்கு கவனமாக ஆய்வு செய்தபின், பதிவுத்துறையில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் சந்தை வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டும், சந்தை வழிகாட்டி

மதிப்பினை சீரமைக்க வேண்டியும், கள நிலவரம் பற்றி ஆராய்ந்து வழிகாட்டி மதிப்பினை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைப்பதற்காகவும் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவை கீழ்கண்டவாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

பதிவுத்துறையில் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழு இரு அடுக்குகளுடன் கட்டமைக்கப்படும்.

(அ) முதல் அடுக்கு உயர்மட்டக்குழு

உயர்மட்டக் குழுவானது ஒரு தலைவர், ஒருங்கிணைப்பாளர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

(i) **தலைவர்**

ஓய்வுபெற்ற மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் உயர்மட்டக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்.

(ii) **ஒருங்கிணைப்பாளர்**

பதிவுத்துறை தலைவர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார்.

(iii) **உறுப்பினர்கள்:**

இக்குழுவின் உறுப்பினர்களாக கூடுதல் பதிவுத்துறை தலைவர் (வழிகாட்டி), மாவட்டப்பதிவாளர் (வழிகாட்டி), ஓர் ஓய்வு பெற்ற உதவி பதிவுத்துறை தலைவர் மற்றும் ஓர் ஓய்வு பெற்ற மாவட்டப்பதிவாளர் ஆகியோர் செயல்படுவர். இக்குழுவானது சார்பதிவாளர் நிலையில் ஓர் அலுவலரையும், இரண்டு உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் ஒருவரையும் கொண்டு செயல்படும்.

மேற்படி குழுவின் அலுவலகம் பதிவுத்துறை தலைவர் அலுவலக வளாகத்தில் உரிய வசதிகளுடன் தனியே இயங்கும் வகையில் அமைக்கப்படும். இக்குழுவின் தலைவர் அரசால் நியமனம் செய்யப்படுவார். மற்ற உறுப்பினர்களான உதவி பதிவுத்துறை தலைவர்(ஓய்வு) மற்றும் மாவட்டப்பதிவாளர்(ஓய்வு) ஆகிய இருவரும் பதிவுத்துறை தலைவரின் கருத்துருவின் அடிப்படையில் அரசால் நியமனம் செய்யப்படுவர்.

உயர்மட்டக்குழுவிற்குத் தேவையான சார்பதிவாளர், உதவியாளர் (இரண்டு), மற்றும் தட்டச்சர்/ஓட்டுநர் ஆகிய பணியிடங்கள் பதிவுத்துறையில் தற்போதுள்ள பணியிடங்களிலிருந்து மறுபரவல் (Re–deployment) மூலம் பதிவுத்துறை தலைவரால் நிரப்பப்படும்.

(iv) **உயர்மட்டக் குழுவின் பணிகள்**

இந்த உயர்மட்டக் குழுவானது, மாவட்ட அளவில் பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டங்கள் நடத்தியும், கள நிலவரம் குறித்து நேரடியாகப் பார்வையிட்டும், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள், வருவாய்,

உள்ளாட்சி, நகரமைப்பு போன்ற தொடர்புடைய துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் (CREDAI போன்றவை) ஆகியோருடன் கலந்து வழிகாட்டி மதிப்பினை சீரமைப்பது குறித்து ஆலோசிக்கும். பின்னர் சந்தை வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களையும் வகையிலும் உண்மையான சந்தை மதிப்பை பிரதிபலிக்கும் வகையிலும் உரிய வழிகாட்டி மதிப்பு சீரமைப்பு குறித்த பரிந்துரைகளை உரிய கால இடைவெளியில் இக்குழு வழிகாட்டும் குழுவிடம் சமர்ப்பிக்கும்.

இக்குழு மாவட்டத்திற்கு வருகை தரும்போது தேவையான உதவிகளை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்வார்கள். இக்குழு சம்மந்தப்பட்ட மாவட்டத்தில் கள நிலவரம் குறித்து பார்வையிடும் போதும் விசாரணை மேற்கொள்ளச் செல்லும் போதும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) சென்னை மற்றும் கோவை மற்றும் அந்தந்த தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை), சம்பந்தப்பட்ட துணைப் பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டப்பதிவாளர்கள் (நிர்வாகம்) ஆகியோர் உடனிருந்து செயல்படுவர்.

**ஆ) இரண்டாம் அடுக்கு வழிகாட்டும் குழு**

வழிகாட்டும் குழுவின் தலைவராக மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் செயல்படுவார்.

**(i) ஒருங்கிணைப்பாளர்**

அரசு செயலாளர் (வணிகவரி மற்றும் பதிவுத்துறை) இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராவார்.

**(ii) உறுப்பினர்கள்**

இக்குழுவின் உறுப்பினர்களாக அரசு செயலாளர், நிதித்துறை, அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஆணையர், நில நிர்வாகம், இயக்குநர், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, பதிவுத்துறை தலைவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர் (வழிகாட்டி) ஆகியோர் செயல்படுவர்.

**(iii) வழிகாட்டும் குழுவின் பணிகள்**

உயர்மட்டக் குழு சீரிய முறையில் செயல்படுவதை கண்காணிக்கும் வகையிலும் உயர்மட்டக்குழு அளிக்கும் வழிகாட்டி மதிப்பு சம்மந்தமான பரிந்துரைகளை ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கும் வகையிலும் இக்குழு செயல்படும்.

4. மேற்கண்டவாறு அமைக்கப்பெறும் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவானது, மூன்று ஆண்டுகள் செயல்படும். உயர்மட்டக் குழுவின் கூட்டம் உரிய கால இடைவெளியில் நடத்தப்பட்டு, உண்மையான சந்தை மதிப்பை பிரதிபலிக்கும் வகையில் வழிகாட்டி மதிப்பு சீரமைப்பது குறித்த தமது பரிந்துரைகளை உரிய கால இடைவெளியில் வழிகாட்டும் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

5. சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவின் உயர்மட்டக்குழுவால் அளிக்கப்படும் வழிகாட்டி மதிப்பு சீரமைப்பு பரிந்துரை அறிக்கைகளை வழிகாட்டும் குழு ஆய்வு செய்து ஏற்றுக் கொண்ட பின்பு, ஏற்கனவே வழிகாட்டி மதிப்பு சீரமைப்பது குறித்து அரசால் மேலே 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி அமைக்கப்பெற்றுள்ள துணை மதிப்பீட்டுக்குழு மற்றும் மதிப்பீட்டுக் குழு கூட்டங்களில் சமர்ப்பித்து, அக்குழுக்களால் பரிசீலிக்கப்பட்டு அக்குழுக்களின் முடிவுகளின் அடிப்படையில் புதிய வழிகாட்டி மதிப்பினைத் தயாரித்து உரிய வழிமுறைகளைப் பின்பற்றி புதிய வழிகாட்டி மதிப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

6. சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் ஊதியம் மற்றும் குழுவின் தலைவரின் பயன்பாட்டுக்கான வாகன விவரம் பின்வருமாறு:–

(i) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவில் உள்ள ஓய்வு பெற்ற அலுவலர்/பணியாளர்களுக்கு ஊதியம் பிற படிகள் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி அனுமதிக்கப்படும்.

(ii) அரசாணை (நிலை) எண்.232, உள்துறை, நாள் 15.03.2017–ன்படி சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழு தலைவரின் பயன்பாட்டுக்கான வாகனம் பதிவுத்துறை தலைவரால் விதிமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

7. பத்தி 3–ல் ஆணையிட்டுள்ளவாறு புதிதாக உருவாக்கப்படும் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவிற்கு கீழ்கண்ட இனங்களுக்காக தொடரும்/தொடரா செலவினங்களுக்கான தொகை இதன் மூலம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

| வரிசை எண் | விவரம் | ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை |
|---|---|---|
| **தொடரும் செலவினங்கள்** | | |
| 1 | அலுவலக செலவினம் (கூட்ட செலவு மற்றும் அறிக்கை தயாரித்தல் செலவு) | ரூ.6,00,000/– |
| 2 | எரிபொருள் | உச்ச வரம்புப்படி |
| 3 | வாகன பராமரிப்பு | ரூ.20,000/– |
| 4 | பயணப்படி | ரூ.10,00,000/– |
| 5 | கணினி எழுதுபொருள் செலவினம் | ரூ.50,000/– |
| **தொடரா செலவினங்கள்** | | |
| 6 | தலைவரின் சீருந்து | ரூ.16,11,200/– |
| 7 | கணினி வாங்குதல் | ரூ.12,00,000/– |

8. மேற்கண்ட நடைமுறைகளுடன் அமைக்கப்படும் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக்குழு மேலே கூறப்பட்டுள்ள கட்டமைப்பின் அடிப்படையிலும் வழிமுறைகளின் அடிப்படையிலும் செயல்பட அனுமதித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

9. பத்தி 6–ல் கண்ட இரண்டு இனங்கள் மற்றும் 7–ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் ஆகியவற்றிற்கு உரிய நிதி ஒப்பளிப்பு கோரும் கருத்துருக்கள் பதிவுத்துறை தலைவரால் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்
பதிவுத்துறை தலைவர், சென்னை – 28.
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வணிகவரி மற்றும் பதிவு(யு)த் துறை, சென்னை – 9.
நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

27/12/2021
பிரிவு அலுவலர்
27/12/2021